# தேவனுக்கே ஆராதனை

***இயற்கையிலே அளிக்கப்பட்ட வரமானது,***
***தேவ பக்தியானது;***
***இறைவனை வணங்குவது, மனித வர்க்கத்துக்கு பண்பானது;***
***ஒவ்வொரு உயிரிலும் கலந்து விட்ட இந்த உரமானது,***
***பக்தி செடியாக மனதிலே வளரத்தான் துடிக்கின்றது;***
***ஆனாலும்,***
***சரியான நீர்ப்பாய்ச்சல் இல்லாமையால், மனமாகிய நிலமானது,***
***சில வனாந்திரமாகவும், சில பொட்டல் காடுகளாகவும்,***
***பல பூமியின் புழுதிகளாகவும் மாறிப்போனது;***
***கடைசியில் அதுவே இந்த உலகத்தின் சாபமானது.***

*ஏன் இந்த தடுமாற்றம் மனித மனதிலே;*
*எதனால் ஏற்பட்டது பக்தி வறுமை நிலை உலகிலே.*
*வறுமையை போக்க, வெறுமையை நீக்க,*
*நம் கரங்களை நம்பினதால் வந்த தீவினையே;*
*தீமைக்கு சொந்தகாரன் ஒரு போலி பக்தனாகிப்போனவன்;*
*பொய்யன், திருடன்;*
*உருவாக்கிய தேவனையே எதிர்த்தவன்;*
*அதையே தொழிலாகவும் ஆக்கிகொண்டவன்;*
*சாத்தானாகிப்போனவன் (தேவனின் எதிரி).*

*தெய்வச்சாயலாய் தோன்றிய உன்னதமானவரின் (இயேசு)*
*உயிர்த்தோழர்கள் மனித உயிர்கள்;*
*சகோதர நேசம் கொண்டவரை, சண்டாளர்கள்,*
*காரணமில்லாமல் சிலுவையிலே அறைந்தார்கள்;*
*தேவனின் பிள்ளையான கிருஸ்துவோ,*
*நம் பாவங்களுக்காக, தெய்வ சித்தத்தின்படியே,*
*ஏற்றுக்கொண்டார் சரீர மரணத்தையே.*

**எதற்காக?**

***பாலை கொதிக்க வைத்தால்தான் அதன் நிலை புரியும் - அது போல***
***தோலை உறித்தால்தான் சாத்தானின் பாவ வேஷம் தெரியும்.***
***சாத்தான் கொண்டு வந்தான் மனிதருக்கு மரண ஓலை;***
***தம் மரணத்தினால் அதை வென்று, இயேசு நமக்களித்தார் ஜீவமாலை.***
***மரித்தவர் எழ மாட்டார் என்று மணக்கணக்கு போட்டவன்,***
***பாதாள சொர்க்கத்தில், சந்தோஷ வெள்ளத்தில்.***
***ஆவியில் தரித்திரம், அது சாத்தானின் சரித்திரம்;***
***பாதாளம் சென்றவர், மரணத்தை வென்றவர்;***
***மூன்றாம் நாள் உயிர்த்தவர், ஆவியில் எழுந்தவர்;***
***பாதாள சாவியே, அது பரமனின் கையிலே;***
***மரணமே நீ எங்கே, ஒழிந்தது உன் மயக்கமே.***

பிரியமானவர்களே,

**இயேசுவை நம்பினோர் சுதந்தரிப்பதில்லை பாதாளத்தை இனி;**
**அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது நித்திய ஜீவன் என்ற கனி.**

சாத்தானின் கொலை வெறியை உணராதவர் மனிதர்கள்;
ஆனால் தேவாதி தேவனின் தூய அன்பையோ மறந்தவர்கள்;
நீதியின் தேவன் நம்மெல்லாருக்கும் அதை உணர்த்தவே,
சிலுவை மரணத்தை தமது சித்தமாக்கினார்.
சாத்தான் ஆதிமுதலே, தெய்வ-மனித உறவை இச்சைப்படுத்தி,
மனிதரை உண்மைத்தேவனிடமிருந்து பிரித்தவன்.
**கொக்கு கொஞ்சுவதற்காகவா மீனை குளத்திலே அள்ளி எடுக்கின்றது?**
பிராணிகளிலேயே கொடிய விஷமுள்ள பாம்பை
தெரிந்து கொண்டவன், இந்த விஷமாகிப்போனவன்;
இந்த ஒரு நிகழ்வே இவனின் சுயநிலை கூறவில்லையா நமக்கு?

சாத்தானின் பூமி ஆசை பேராசை;
அவனது சிந்தனைகளை அனுமதித்ததால்,
அது மனிதரின் பொருளாசையானது;
அதனால், இன்று அழியும் பொருள்களுக்காக,
அழியாத ஆத்துமாவை கொல்லும் அவல நிலை;
புரியாத உயிர்கள்; தேவனை அறியாத பயிர்கள்;
ஆவியில் வளராத நிலையில், பாதாள சொர்க்கத்தில்.

நண்பர்களே! தேவன் வாழும் இடம் பரமண்டலம்;
சாத்தான் என்னவோ தனது இடத்தை சொர்க்கம்
என்றுதான் சொல்லிக்கொண்டு திரிகின்றான்.
**ஏமாளிகள் இருக்கும்வரை எத்தனுக்கு உல்லாசம்தான்.**

**பாவ எண்ணத்தை உருவாக்கியவன் பாவமானவன்;**
**இறக்க வேண்டும் ; அதனால்**
**தீயஆவி உருவத்தில் இருந்த பாவம், நித்தியமரணமானது;**
**இது தேவனின் ஆதியான நீதியானது;**
**இதை பூமிக்கு கொண்டு வந்தவன், தீய ஆவிக்குச் சொந்தமான**
**சாத்தான்;**
**எதற்காக?**
**மனித உள்ளங்களை திருடுவதற்காக.**
**கிருஸ்துவில் மறுபடி பிறந்தவன் பாவத்தை மறந்தவன்;**
**நித்திய ஜீவனுக்குள் எழுந்தவன்;**
**இது தேவனின் கிருபை - இயேசுவின்**
**மரணத்தால் விளைந்த அன்பின் பாதை;**
**இதை பூமிக்கு கொண்டு வந்தவர், நேற்றும்**
**இன்றும் என்றும் மாறாதவர்.**

தேவன் நீதியுள்ளவர், உண்மையை காப்பவர்;
அவரது அன்பிற்கு நாம் செலுத்தும்
ஒரே நன்மை, 'ஆராதனை'.

இந்த ஆராதனையை எப்படி செலுத்துவது?
**இதுதான் மனிதரின் பெரிய பிரச்சினை.**
பூமியும் அதன் பொருள்களும் தேவனுடையது;
மனிதர்கள் எல்லோரும் அவரால் உருவாகுபவர்கள்.

**உருவான நாம், நம்மை உருவாக்கிய தேவனை, உருவாக்கலாமா?**
**இல்லை, அவர் உருவாக்கின பொருள்களைத்தான் கொடுக்கலாமா?**

**சரீரத்தில் மரிக்க பிறந்தவர்களான நாமெல்லாரும்,**
**ஆவியில் பிழைக்க தேவை, கிருஸ்துவின் கிருபை;**
**தேடும் வேளையில், தேவனின் குழைந்தைகளாகிறோம்,**
**அது அவரது மகிமை.**

தேவனின் முதற்பேரான பிள்ளை கிருஸ்து;
நாம் அவரது குழைந்தைகள்;
தமது குழைந்தைகள் ஆவியில் வளரவே - தேவன்
ஜீவனுள்ள வார்த்தைகளை வரங்களாக
வைத்திருக்கின்றார் பூமியிலே.
தேவன் ஆவியாய் இருக்கின்றார் - அதனால்
அவர் எங்கும் வியாபித்திருக்கும் உன்னதமானவர்;
அவரிடம் அசுத்தம் சேருவதில்லை - அதற்காகவே
உருவாக்கி வைத்திருக்கின்றார் பாதாளத்தை.
பாதாளத்துக்கு சொந்தமானவனை பூமியிலே
அனுமதித்தது பொல்லாத மனிதரின் யோசனைகள்;
இது ஆராதனை பசியால் வந்த தீவினைகள்.

மனிதரின் பிரச்சினையே யாரை ஆராதிப்பது?
**எப்படி ஆராதிப்பது? எங்கே ஆராதிப்பது?**

**மனித மரணத்திற்கு மூல காரணமே - பரமனை (பிதாவை)**
**ஆராதித்த ஒருவன் (ஆராதனை கூடத்தின் தலைவன்),**
**சுய மகிமை தேடி- பாம்பாக உலகிலே**
**அவதாரம் எடுத்தினால் வந்த தொல்லையினால்தான்;**
**உண்மை இதுவாக இருக்க, நம்மில் பலருக்கும்**
**இந்த பாம்புக்கு பால் ஊற்ற ஆசை - இதுதான்**
**தீமைக்கு நாம் செய்யும் நன்மையோ?**

ஆராதனை நன்மையான ஒரு காரியம் - அதை
தீமையின் உறவாக தொடர்வதால்,
முடிவு என்னவோ நியாயதீர்ப்பினில் - ஆனால்
அது நம்மை கொண்டு செல்ல இருப்பது,
கயவனின் பாதாளத்திலா- இல்லை,
தேவன் வாழும் பரலோகத்திலா?

**தேவன் சமாதானமானவர்;**
**அவரது குமாரன் கிருஸ்து நமக்காக, தமது**
**சமாதானத்தையே வைத்து இருக்கின்றார்;**
**இது நன்மையான சொந்தம்.**

தீமை உள்ளான அந்தரங்கம்;
தீய எண்ணங்கள் கருவாகும் போது,
உண்மை நிலை தெரியாது;
ஆனால்  செயலாக உருவாகும் போது,
நம் உள்ளத்தை உலகிற்கு காட்டி விடும்;
தீமையை விதைக்கும் சாத்தானும் அப்படித்தான்.

நன்மையாக உலகிலே உதித்தவர் இயேசு பெருமான்;
அதனால் உலகத்திலிருந்து,
நித்திய மரணமாகிய தீமையை நீக்கினார் பரமன்.
நித்திய மரணம் ஆவி உலக தண்டனை;
அது ஆத்துமா அடையும் வேதனை;
தேவனின் இந்த நீதியான தீர்ப்பு பெற்றவன்
பெயல்சபூல் (சாத்தான்);
இவன் செய்தது ஆராதனை துரோகம்.
ஆராதனை படைத்தவரின் பெருமைக்குரிய சந்தோஷம்;
ஆராதிக்க பிறந்தவன் அதை பெற நினைத்தது தோஷம்;
தோஷம் நீங்க போடுகின்றான் பல வேஷம்;
அப்பாவி உள்ளங்களை அடையும் வெறியிலே
அநீதியாகிப்போனான்;
அதனால் அநீதியெல்லாம் பாவமானது.
எல்லா வழிபாடுகளும் ஒன்றுதான் என்று கூறும்
சாத்தான், இயேசு ஆண்டவர் மேல் ஏன் இத்தனை
கோபம் கொள்கிறான்?
நாமெல்லாரும் அவர் குழந்தைகளாக மாறி விட்டால்,
வந்தது இவனது முடிவு;
தூக்கி போட்டுவிடுவார் இறைவன், இவனை அக்கினிக்கடலினிலே.

மனிதன், சரீரத்திலே உருவான தேவனின் பிள்ளை;
ஆவியும், ஆத்துமாவும் அவன் பெற்ற மணம் வீசும் முல்லை;
மணம் வீசிய ஆத்துமா, எப்படி நாற்றமெடுக்க ஆரம்பித்தது?
தீமையான எண்ணங்களை எப்படி அனுமதித்தது?
இதில் மனிதனின் பங்கு என்ன?
உலகை சற்றே நிதானித்து பார்ப்போம்;
ஏன் இத்தனை ஏற்ற தாழ்வுகள்.

அழிந்திடும் சரீரத்தை உருவாக்கவில்லை தேவன்;
பிறகு எதற்காக நாம் மரணமடைகின்றோம்?
எங்கே போகும் அதனுள்ளே இருக்கும் அழியாத ஆத்துமா?
இப்படி பல கேள்விகள் மனதிலே;
பதில்கள் கிறிஸ்துவிடம்;
இவரை வேண்டாம் என்போர் நித்திய மரணத்தை நேசிப்பவர்களே!

ஏனென்றால்,
எங்கே போவோம் என்று தெளிவாக தெரியாமல்
நம் சரீரத்தை விட்டு ஆத்துமா வெளியேறினால்?

ஒன்று மட்டும் புரிகின்றது,
பெயல்சபூலின் ஆத்துமா எரி நரகத்துக்கு சொந்தமானது;
அது மனித வெறி பிடித்த மிருகம் என்பது.
அதனால் அவனது சிந்தனைகள் தினமும்,
மனிதனை தேவனுக்கு விரோதமாக திருப்புகின்றது.

ஒருவன் மற்றவனை சிநேகிக்க வேண்டும்
என்கிறார் இயேசு பெருமான்.

**யார் இவர்கள்?**

இந்த ஒருவன் இயேசுவின் பிள்ளை;
அந்த மற்றவன் அவனது விரோதி.
பாருங்கள், தீமைக்கு நன்மை செய்து,
பகைவனையும் நேசிக்கும் பண்பு - அது
இயேசுவின் அன்பு.

மனிதர்கள் பெயல்சபூலுடன் சேர்ந்து அடிக்கின்றனர் ஆட்டம்;
அது தொடர்வதற்கு பூமி ஒன்றுமில்லை அவனது சிங்கார தோட்டம்.
பூமி தேவனின் ஆலயமாக உருவானது - திருடனின்
ஆராதனை இச்சையால் அது பாவ லோகமானது.

ஆத்துமாக்களை அழித்து, அநியாயம் செய்பவன்
இன்னும் அநியாயம் செய்யட்டும் என்கிறார் இறைவன்.

**ஏன்?**
இந்த உலகிலே நன்மையான கிருஸ்துவின்
கிருபையும் இருப்பதினால்தான்- அதற்கு
இயேசுவின் பிள்ளைகளே சாட்சிகள்.
இந்தியனை நியாயம் தீர்க்கும் போதும்,
தமிழனை நியாயம் விசாரிக்கும் போதும்,
பேதுருவும் பவுலும் தேவையில்லை;
சாதுசுந்தர்சிங்கும், தினகரனும் இயேசுவுடன் இருப்பார்கள்;
ஒரே மொழியிலும் பேசுவார்கள்.
எப்படி சந்திக்கப்போகின்றோம் இந்த இரட்சகர் இயேசுவை?
பெயல்சபூலின் உருவங்கள் எல்லாம் உருக்குலைந்து
போகும் நாளிலே, அவனது வேஷங்கள் கலையும்
வேலையிலே, அழுது புலம்பி என்ன பிரயோசனம்.

பெற்றவரை மதிக்க வேண்டும் வாழ்விலே - என்றும்
படைத்தவரை துதிக்க வேண்டும் தாழ்விலே;
தேவனுக்கு சொந்தமான ஆராதனை - செலுத்திடவே
தேவ சாயலாக படைத்திட்டார் மனிதனை;
கண்களின் இச்சையாலே பெரும் சோதனை - அது
கடைசியில் தருவது மரணவேதனை.

மரண வேதனையை வென்றவர்தான் இயேசு,
திருடனின் சோதனையை கடந்தவர்தான் கிருஸ்து.
இன்று நாம் அவரை சந்தித்தால் உலக இரட்சகர்;
நியாயதீர்ப்பின் நாளிலே அவர் நம்மை விசாரித்தால் உலக அரசர்.

எல்லோருக்கும் எல்லாமுமாக இருப்பவர் இறைவன்;
தமது பண்புகளை சரீர பிள்ளை ஆதாமின் மூலமாக
உருவாக்க நினைத்தார் பூமியிலே;
அவன் பெயல்சபூல் சொற் கேட்டு இழந்தது இறையன்பு.
படைப்பின் உன்னத நோக்கமே ஆராதனையில் ஒளிந்திருக்க,
ஒளியான தேவன், தமது குமாரனை உலகத்திற்கு ஒளியாக்கினார்.

**இயேசுவே சரீரத்தில் வாழ்ந்த தேவ ஒளி;**
**அவரது மரணம் நமது சமாதானத்திற்காக செலுத்தப்பட்ட பலி;**
**இது தேவ சமாதானம், அதாவது தேவனோடு இனையும் உறவு;**
**இரட்கராகிய கிறிஸ்துவின் மூலம் நமக்கு அளிக்கப்பட்ட பரிவு.**

இயேசு கிறிஸ்து எங்கும் வியாபித்திருக்கும் உன்னதமானவர்;
அவரை நம் உள்ளத்தில்தான் குடியேற்ற முடியும்;
கைகளினால் உருவான இல்லத்தில் அல்ல.
ஆவியாக இருக்கும் தேவன், ஒளியின் வஸ்த்திரம் தரித்தவர்;
பரிசுத்தமே தமது பண்பாக நிறைந்தவர்;
அன்பு உள்ளம் கொண்டவர், ஆத்துமாவில் வாழ்பவர்;
படைத்தவர், சர்வ வல்லமையுடையவர்;
**அழிப்பதற்காக படைப்பவரல்ல, இந்த அழியா நிலையுடையவர்.**
ஆராதனைக்குரியவர், நம் அன்பிற்கு பாத்திரமானவர்;
அவரது சுதந்திரமாக (குழைந்தைகளாக) நம்மை அழைப்பவர்.

**ஏன் வேண்டாம் என்று சொல்ல?**

**கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துதான் பார்ப்போமே.**
**அந்த பரிசுத்த தேவனுக்கே, எல்லா துதியும், கனமும்,**
**மகிமையும் செலுத்துவோமாக.**

ஆமென்,
அல்லேலுயா.